# குடியேற்றங்களால் உருவான தொன்மங்கள் - நல்லூர் அரசமரபின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த குடியேற்றங்கள் தந்த தொன்மங்கள் பற்றிய ஆய்வு

செல்லையா கிருஷ்ணராசா

## ஆய்வுச்சுருக்கம்

*தென்னாசியாவின் குறிப்பிட்ட பிரதேசங்கள் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொன்மங்களை அபரிமிதமாகக் கொண்டிருப்பதற்கான காரணம் பற்றி ஆராயும் போது அங்கு சர்வதேச வாணிகத்துறையும், பௌதிக இயற்கை வள - மூலவளங்களுடன் தொடர்புபட்ட வகையிலான உள்நாட்டு சந்தைப் பரிவர்த்தனை நடவடிக்கைகளுமே தொடர்ச்சியான குடியேற்றமுறைச் செயற்பாடுகளினை தூண்டிய காரணிகளாக அமைந்திருந்தன. தென்னாசியாவில் குறிப்பிட்ட பிரதேசங்கள் வரலாற்றுக் காலத்திலிருந்தே தொடர்ச்சியாகக் குடியேற்ற நடைமுறைக்குள் உட்பட்டு வந்திருந்தமையின் பின்னணியில் தொன்மங்களும் அவற்றினை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றெழுத்தியல் மரபுகளும் உருவாக்கம் பெற்றமையை இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன (பக்தவச்சலபாரதி, இலக்கிய மானிடவியல், ப.௨௯௰). சர்வதேச வாணிபக் கூட்டுக்களுக்கான வாணிப மார்க்கங்களுக்குரிய கேந்திரஸ்தானங்கள் அவற்றின் சமுத்திரவியல் பக்கத் தொடர்புகள் காரணமாக வேகமான வரலாற்று வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தமையைக் காண்கின்றோம். புராதன இந்தியாவில் கேரளம், நேபாளம்,காஸ்மீர் என்பன அத்தகையதொரு வாணிபமார்க்கத்திலமைந்த தனித்துவமான பொருளாதார வளம் மிக்க செழிப்பான புலங்களாகவும், சமய அடிப்படையில் தனித்துவமான முறையிலமைந்த சமய வரலாற்று மரபுகளுக்குரிய தொன்மங்களையும் கொண்டிருக்கும் பிராந்தியங்களாகவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையிலும் அத்தகையதொரு பன்முகப்படுத்தப்பட்ட வாணிப, பொருளாதார, சமய வரலாற்று தொடர்புகள் இலங்கையிலும் ஏற்பட்டிருந்தமைக்கான இலக்கிய, தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இலங்கைத் தீவின் தென்கிழக்கிலங்கைப் பிராந்தியம் யாவா மற்றும் மலேசியா, பாலித்தீவு போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து தொன்மையான குடியேற்றங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. உரோகணத்தின் வரலாறு மற்றும் புராதன காலப் பன்மைப் பண்பாட்டுவளர்ச்சி நிலைகளை அங்கிருந்து கிடைத்துவரும் புராதன தொல்லியற் சின்னங்களிலிருந்தும், இராவணா மற்றும் பஞ்சவர் ஆட்சி மரபுகளிலிருந்தும், கௌதம புத்தருடைய மகியங்கணைக்கான முதல் வருகை பற்றிய தொன்மங்களிலிருந்தும் காணமுடிகின்றது. வட இலங்கையைப் பொறுத்தவரையிலும் குறிப்பாக யாழ்ப்பாணக்குடாநாடு பொறுத்தும் இத்தகைய பண்பாட்டு நிலைமைகளை விளக்கும் தொன்மங்கள் குடியேற்றங்கள் வாயிலாக ஏற்பட்டிருந்தமைக்கான வரலாற்று மூலங்களை மத்திய கால இலக்கிய மரபுகளினூடாக கண்டு கொள்ள முடிகின்றது. நல்லூர் இராசதானியில் அக்கால முகாமைத்துவ நடவடிக்கைகளை மையப்படுத்திய வகையில் எழுந்த அரசபாரம்பரியம் பற்றிய தொன்மங்கள் கூட குடியேற்ற முறைகளாலேயே உருவாக்கப்பட்டமையை வட இலங்கைப் பண்பாட்டில் யதார்த்தமாகக் காணலாம். இவ்வாய்வின் நோக்கமானது மத்திய கால வடஇலங்கையில் இலக்கிய மரபுகளில் பதியப்பட்ட நல்லூர் இராசதானியுடன் தொடர்புடைய வரலாற்றுத் தொன்மங்களைப் பற்றியும் அவற்றின் வடிவங்களைப் பற்றியும் ஆராய்வதாக அமைந்துள்ளது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய ஆய்வுகளில் நல்லூர் இராசதானியுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட தொன்மங்கள் வெறுமனே ஐதீகங்கள் என்ற அடிப்படையில் கையாளப்பட்டிருந்தனவே தவிர அவற்றிற்கும் இடைக்கால வடஇலங்கைச் சமூக உருவாக்கத்திற்குமிடையிலான கருத்தாடல்கள் தொடர்பாக ஆராயப்பட்டிருக்கவில்லை. எஸ்.பத்மநாதன், கா. இந்திரபாலா ஆகியோர் அவற்றை வரலாற்றுக்கருவுடைய ஐதீகங்கள் (Historicsal Myths) என்ற அடிப்படையிலேயே அவற்றின் இருப்பினைக் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான ஓர் ஆய்வியல் சூழலில் இலக்கிய மானிடவியல்*

அணுகுமுறையில் இதுவரையில் ஐதீகங்களாகக் கருதப்பட்டவற்றை தொன்மங்கள் என்ற நோக்கில் ஆராய வேண்டிய அவசியமான நிலைப்பாடு இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள், தொன்மங்கள் ஆகிய மூன்று செயற்பாட்டு வடிவங்களும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்தவை என்ற கோட்பாட்டினை நல்லூர் இராசதானி பற்றிய வரலாற்றுச் சம்பவங்களுடன் இணைத்து வரலாற்று ஆய்வியல் அடிப்படையில் இங்கு நோக்கப்படுகின்றன. இவ்வாய்வில் ஒப்பீட்டடிப்படையிலானதும் விபரணவியலடிப்படையிலானதுமான வரலாற்றாய்வு முறையியலே பின்பற்றப்படுகின்றது. தொன்மங்கள் பற்றிய பொருண்மை அடிப்படையிலான ஆய்வியல் இங்கு பின்பற்றப்படவில்லை. இதுவரையில் வெளிவந்த நல்லூர் இராசதானி பற்றிய ஆய்வுநூல்கள், அவை தொடர்பாக வெளியிடப்பட்ட விமர்சன நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினரின் வெளியீட்டுத் தொகுப்புக்களினூடாகப் பெறப்பட்ட சான்றுகள் ஆகியனவற்றை ஆதாரமாகக் கொண்டே மிகச்சுருக்கமாக வட இலங்கையில் உருவான நல்லூர் பற்றிய தொன்மம் ஓர் அறிமுகநிலையில் ஆராயப்படுகின்றது. இங்கு தொன்மங்களூடாக வெளிப்படுத்தப்படும் வரலாற்றுத்தடயங்கள் ஆராயப்படவில்லை. அத்தொன்மங்களிடையே பாடபேத வேறுபாடுகள் இருப்பதன் காரணத்தினால் இன்னோரிடத்தில் அவ்விடயம் விரிவாக ஆராயப்படும்.

**அருஞ்சொற்கள் :** தொன்மம், இராசதானி, வாணிபமார்க்கங்கள், இலக்கிய மானிடவியல், மரபுகள், பிரபஞ்சம், குடியேற்றம், செல்நெறி, கருத்தாடல்கள், வரலாற்றுத்திரிபு, சமூகப்பிறழ்வு, ஆரியச்சக்கரவர்த்திகள்.

**தொன்மங்கள் - வரையறை**

ஆங்கிலத்தில் Antecedent என்ற பதத்திற்கு நிகராக தமிழில் தொன்மம் என்று குறிப்பிட்டுக் கொள்வதனைக் காணலாம். பக்தவத்சலபாரதி என்ற மானிடவியலாளர் தொன்மங்கள் பற்றி பின்வருமாறு வரையறை செய்கின்றார். "தொன்மங்கள் எனப்படுவை நமது சந்ததினர் தெரிந்து கொண்டதை நமக்குத் தெரிவிப்பதாகவும், நமது பிரபஞ்ச அனுபவங்களை நமக்குப் புரிந்து கொள்ளவும், நமது அன்றாட வாழ்விற்கான அர்த்தத்தைத் தத்துவ, சமயரீதியில் விளங்கிக் கொள்ளவும், விளக்கஞ்சொல்லவும் அவற்றின்வழி சமூக வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் உதவுபவை எனலாம். எனினும் தொன்மங்களின் செயல்பாடுகள் பன்முகப்பட்டவை. ஒவ்வொரு தொன்மமும் அந்தந்த இனத்தாரின் கூட்டுமனவெளிப்பாடு. இந்திய சமூகம் போன்ற மிகவும் நீண்ட வரலாறு கொண்ட பழமைச் சமூகங்களின் தொன்மங்களை அர்த்தப்படுத்துதல் என்பது அம்மொழி வழிப்பட்ட சமூகத்தின் மனப் பிரதிகளை அர்த்தப்படுத்துவதாகும். இந்த நீண்ட வரலாற்றுக் காலகட்டங்களில் ஏற்பட்ட சமூக, பண்பாடு, வரலாற்று நிகழ்வுகளின் தருக்க உறவுகளைத் தொன்மங்கள் கருத்தாடல்கள் செய்கின்றன." (பக்தவத்சலபாரதி, இலக்கிய மானிடவியல், 2014, ப.294 ) இத்தகைய கருத்தாடல்கள் நிரம்பப்பெற்ற தொன்மங்கள் நிறைந்த ஒரு பிரதேசமாக வட இலங்கையில் யாழ்ப்பாணக்குடாநாடு விளங்கிவருவதும், நல்லூர் அதன் கேந்திர ஸ்தானமாகக் காணப்படுவதுடன் இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கேந்திர ஸ்தானத்தின் நடவடிக்கைத்தளமானது சங்கிலியன் தோப்பினை மையப்படுத்தியிருந்த வகையும் நிர்வாக மற்றும் பண்பாட்டு நிறுவனங்கள் இதனைச் சூழ்ந்த வகையில் வளர்ச்சி அடைந்திருந்த நிலையினையும் மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியப் பதிவுகள் ஊடாக அறிய முடிகின்றது. நாயன்மார்கட்டில் அமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் சரஸ்வதி மஹால் பற்றிய தொன்மம் இன்னும் தொல்லியல் அடிப்படையில் உறுதிப்படுத்தக்கூடிய சூழல் ஏற்படாத நிலையிலும் அதன் வரலாற்று

முக்கியத்துவமானது மத்திய கால நல்லூரின் பதிவுப் பெட்டகமாக இலக்கியங்களின் இருப்பிடமாக விளங்கியிருந்த வரலாற்றுச் சூழலை வரலாற்றுத்திரிபாக அன்றி காரண-காரிய அடிப்படையில் தர்க்கரீதியான ஒரு பண்பாட்டுத்தளமாக உருவாக்கம் பெற்றிருந்தமையை விளங்கிக் கொள்ள முடிகின்றது. பரராசசேகரம் என்ற வைத்திய நூல் தோற்றம் பெற்ற அதேமையம் இற்றை வரைக்கும் (நாயன்மார்கட்டு வைத்தியசாலை என்ற பெயரில்) வைத்தியப் பாரம்பாரியத்தின் தொன்மத்தினை பாதுகாத்து வைத்திருப்பது போன்று சரஸ்வதி மஹால் பற்றிய தொன்மமும் அங்கு காணப்படுகின்றது.

**தொன்மங்களும் வரலாற்று விளக்கங்களும்**

ஒரு வரலாற்றாசிரியனுடைய சாதாரண உணர்வினைப் பொறுத்து அவன் தான் சார்ந்திருக்கும் ஒரு சமூகப் பொறுப்பு மிக்க நிலைமையில் அவனது பணி எவ்வாறு அமைய வேண்டும் என்பது ஒரு யுத்தம் அல்லது மனிதப் பேரவலம் நிகழ்ந்ததன் பின்னர் அக் குறிப்பிட்ட சமூகத்தின் இருப்பினை தக்கவைப்பதிலேயோ நிகழ்வின் விளைவுகளுக்கு நியாயம் கற்பிப்பதிலேயோ அல்லது எஞ்சிய சமூகத்தினை சமூகப்பிறவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக அறிவுறுத்துவதிலேயோ தங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் இருப்பினைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அடிப்படைத் தளமாக அமைவது அச்சமூகத்தின் வரலாற்றுத் தொன்மங்களின் பலமான பக்கங்களை நிலை நிறுத்துவதேயாகும் என்பதனையே அவ்வரலாற்றாசிரியன் உணர்த்த வேண்டும். போராட்டங்கள் நிகழ்ந்த பல நாடுகளிலும் இவ்வாறான தொன்மங்களின் பலமான பக்கங்கள் பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில் இக்குறிப்பிட்ட இனத்தினுடைய தோற்றத் தொன்மம் தொடர்பாக எமக்குக்கிடைக்கின்ற சான்றுகள் மத்திய காலக் குடியேற்றங்களூடாகவே கிடைத்துள்ளன. இக்குடியேற்றங்களைப் பற்றிய பதிவுகள் இலக்கியங்களாக, தலபுராணங்களாக, வைத்திய - சோதிட நூல்களாக உருவாக்கப்பட்டு, இன்று எமது சமூகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு வட இலங்கை மீதான குடியேற்றங்களை கி.பி 8 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரைக்கும் நிகழ்ந்தவற்றை முதலாம் கட்டமாகவும் கி.பி 13 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரைக்கும் நிகழ்ந்தவற்றை இரண்டாம் கட்டமாகவும் அதன் பின்னர் ஏற்பட்டவை ஐரோப்பியர் காலக்குடியேற்றங்களாகவும் வகுத்துக் கொள்ள முடிகின்றது. எமது ஆய்வினைப் பொறுத்தவரையில் முதலிருகால கட்டங்களுமே நல்லூரரை ஆட்சிமரபுகளுடன் தொடர்புபடுத்தக்கூடிய தொன்மங்களுடன் பிணைத்து வைத்திருப்பதனை எடுத்துக் காட்டமுடிகின்றது.

**புராதன யாழ்ப்பாணம் - தொன்மங்களை உள்ளடக்கிய முதலாவது வரலாற்று வரைபு**

Ancient Jaffna என்ற நூலை 1920 இல் எழுதிய முதலியார் இராசநாயகம் யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மங்களை வரலாற்றடிப்படையில் மிகச்சிறந்த முறையில் பதிவு செய்து வைத்துள்ளமையானது யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது. முதலியார் செ. இராசநாயகத்தின் இந்த ஆய்வினை அடிப்படையாக வைத்தே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1960 களில் இருந்து உருவான தமிழ் வரலாற்றாசிரியர்கள் குறிப்பாக பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, A.வேலுப்பிள்ளை, கா.இந்திரபாலா, சி.பத்மநாதன், வி.சிவசாமி ஆகியோர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மை, ஆட்சிமரபுகள், நல்லூர் இராசதானியின் பரப்பு, பண்பாட்டு அழிபாடுகள், சிற்பங்கள், ஆரியச்சக்கரவர்த்திகளால் வெளியிடப்பட்ட சேது நாணயங்கள் தொடர்பான ஆய்வுகளை

நடாத்தி வந்துள்ளனர். (இந்திரபாலா,கா. யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெற்ற காலமும் சூழ்நிலையும், **இளங்கதிர்**, பக். *13- 56*). மேலும் போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தரது ஆவணங்களைப் பயன்படுத்தி யாழ்ப்பாண இராச்சியத்தின் இருப்பினையும் நிறுவியுள்ளனர் (சிற்றம்பலம், சி.க.(தொ.ஆ), **யாழ்ப்பாண இராச்சியம்**, வி.சிவசாமி, *'வரலாற்று மூலங்கள்' பக். 01 - 24, 1992*) இருந்தபோதும் அண்மைக்காலங்களில் நல்லூர் இராசதானியுடன் தொடர்புபட்ட வரலாற்றிலக்கியங்களை வரலாற்றெழுத்தியல் அடிப்படையில் ஆராய்கின்ற புதிய ஆய்வியல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான இலக்கியங்களில் கூறப்பட்ட தொன்மங்கள் பற்றிய பாடபேதங்கள் ஆராயப் பட்டனவே தவிர நல்லூர் இராசதானியுடன் அத் தொன்மங்கள் கொண்டிருந்த கருத்தாடல்கள் என்பன ஆராயப்படவில்லை **( பத்மநாதன், சி.ஈழத்து இலக்கியமும் வரலாறும்** பக். 01-153., 2004**)** இந்நிலையில் அத்தொன்மங்களைப்பற்றி ஆராயவேண்டிய சிந்தனையானது நல்லூர் இராதானியின் தோற்றப்பாட்டினையும் மத்திய கால புவிசார் அரசியல் சக்தியின் முக்கியத்துவத்தில் நல்லூர் வகித்திருந்த பங்கினை அளவீடு செய்வதற்கும் உதவுவதாகும். அவ்வகையில்வட இலங்கையில் நிகழ்ந்த குடியேற்ற செயற்பாடுகளினூடாக பதியப்பட்டுக்கிடைத்துள்ள இத்தொன்மங்கள் வெளிப்படுத்தும் கருத்தாடல்களை சமூகவியல், மானிடவியல் அடிப்படைகளில் ஆராய வேண்டிய அவசியத்தேவையின் பின்னணியில் நல்லூர் பற்றிய தொன்மங்கள் ஆய்வின் பொருட்டு இங்கு நிரைப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் இக்கட்டுரையானது யாழ்ப்பாணத்து வரலாற்றுத் தொன்மங்கள் பற்றிய எதிர்கால ஆய்வு முயற்சிகளுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக அமைகின்றது என்பது இங்கு மனங்கொள்ளப்படவேண்டியதாகும்.

**நல்லூர் பற்றி தொன்மங்களின் பொருண்மை**

வட இலங்கை பற்றிய (அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம்) தொன்மங்களினூடாக முதன் முதலாக அறிமுகப் படுத்தப்பட்ட நிலையில் நல்லூரானது மத்திய காலவாழ்விலும் வழிபாட்டிலும் ஊறிப்போன வகையில் இன்று வட இலங்கைத்தமிழ் மரபுகளின் உயிரோட்டமான ஆத்மீக உணர்வின் மையமாக, இலங்கையிலுள்ள இந்துக்களின் புனித பூமியாக வடிவெடுத் திருப்பதனைக் காண்கின்றோம் . இதுவே வடஇலங்கைத் தமிழரின் **செவ்வியல் தொன்மமாக** அமைந்துள்ளது. " உலகளாவிய நிலையில் நோக்கும்போது படைப்புத் தொன்மம் அல்லது தோற்றத்தொன்மம் (Creation or origin myth) மட்டுமே ஒவ்வொரு இனத்தவரும் தனித்தனியாகக் கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. அதனால்தான் தொன்மங்களிலேயே தோற்றத்தொன்மங்களின் எண்ணிக்கையே உலகளவில் மிகுதியாக இருக்கின்றது. உலகம் தோன்றிய தோற்றத் தொன்மமும் மானுட இனத்தின் தோற்றத் தொன்மமும் ஒவ்வொரு இனத்திற்கென்றும் தனித்துவத்துடன் காணப்படுகின்றன (பக்தவத்சலபாரதி, **இலக்கிய மானுடவியல்**, ப.189, 2014). ஆனால் வட இலங்கைத் தமிழரின் தொன்மவியல் இடம்பெயர்தல் கோட்பாட்டை செல்நெறியாகக் கொண்டிருப்பதன் காரணத்தினால் யாழ்ப்பாணத்திற்கேயுரிய தமிழ்த் தொன்மங்கள் பற்றிய தேடுதல் இங்கு நிகழாமல் இருந்துவிட்டது. இக்காரணத்தினால் குடிப்பெயர்வுகளை, குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டே வட இலங்கையின் தொன்மங்கள் தமிழகத்தினைத் தழுவிய வகையில் மத்திய கால இலக்கியங்களில் செல்நெறியாக பதிவு செய்யப்பட்டுவிட்டன.

**பிராந்தியப் புவிசார் முகாமைத்துவ மையமாக நல்லூர்**

தேசிய மட்டத்திலும் சரி, பிராந்திய மட்டத்திலும் சரி நல்லூர் பெற்றிருக்கும் வகிபாகம் வட இலங்கையில் தனித்துவ மானதாக விளங்குவதற்குக் காரணம் அதன் மத்திய கால வரலாற்றுப் பின்னணியே ஆகும். ஒரு குறிப்பிட்ட காலகட்ட வட இலங்கைப் பண்பாட்டிற்கு நல்லூர்ப் பண்பாடு (Nallur culture) எனப் பெயரிடப் பட்டமைக்குக் காரணம் மத்திய கால வட இலங்கையின் வரலாற்றில் நல்லூர் இராச்சியம் படையெடுத்துடன்கூடிய நிர்வாகமுகாமைத்துவ கட்டமைப்புடன் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு மையமாக உருவாக்கப் பட்டிருந்தமையாகும். அவ் வரசியல் பலத்தினை அல்லது நிர்வாக முகாமைத்துவ முறையை தழுவிய நிலையில் வடஇலங்கையில் மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் தொன்மங்களைப் பதிவு செய்து கொண்டுள்ள முறையைக் கண்டுகொள்ள முடிகின்றது. அவ்வுருவாக்கத்தின் பின்னணியில் மத்திய கால வடஇலங்கையில்வாணிபப்பொருளீட்டத்தின் செழிப்புக் கொண்ட பிராந்தியமொன்றின் முகாமைத்துவ முறை வளர்ச்சிக்கு ஆதரமாகவும், வட இலங்கையின்தலைநகராக மையப்படுத்தி நின்ற வகையில் மிகவும் பலம் வாய்ந்த பிராந்திய அரச கட்டமைப்பிற்குரிய நிர்வாக முகாமைத்துவ முறையொன்று தோற்றம் பெற்றுக் கொள்ளவும் சந்தர்ப்பம் கைகூடியது. தென்மேற்கிலங்கையின் கடற்கரையோர நிலத்திணிவின் மீதான கோட்டை யரசின் மேலாதிக்கத்தினையும் சிறிது காலம் முறியடித்துக்கொண்டு, ஆரியச் சக்கரவர்த்திகளின் நல்லூர் அரசு ஆக்கிரமிப்பு ரீதியான அணுகுமுறையில், வடகடல்சார்பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் நிர்வாக ஆள்புல மொன்றினைக் கட்டியாண்ட வகையினையும் தொன்மங்கள் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டு ள்ளமையை காண்கின்றோம். கி.பி. 13ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்துடன் வட இலங்கையில் அராபியர் வசம் சிக்கியிருந்த துறைமுக மையங்கள் எல்லாவற்றையும் கையகப்படுத்திய நிலையில் புதிய பொருளாதார மையங்களை உள்நாட்டிலும், வடமேற்கு கடற்கரைப்பிராந்தியத்திலும், கன்னியாகுமரி மற்றும் இராமேஸ்வரத்தினையும் உள்ளடங்கிய நிலையில் உருவாக்கியதோடு, இரண்டாம் பாண்டியப்பேரரசினை தனது பாதுகாப்பரசாகவும் இராமேஸ்வரம் சேதுபதிகளது அரசினை திறையரசாகவும் மாற்றிக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகளின் நல்லூர் அரசு கோலோச்சியது. இவ்வாறு புதியதோர்புவிசார்அரசியல் நிலைமையுடன் வட இலங்கையில் நல்லூரினை மையப்படுத்திய வகையில் புத்தூக்கம் அடைந்தமையைத் தொடர்ந்து ஒரு புதிய சமூகக் கட்டமைவின் எழுச்சி வட இலங்கையில் தவிர்க்க முடியாத படி ஏற்பட்டுக் கொண்டது.

கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் , விஜயநகரப்பேரரசுக்காலக் கல்வெட்டுக்கள், பல்வகைப்பட்ட சேது நாணய வெளியீடுகள், தோம்புச் சுவடிகள், சிற்பங்கள் மற்றும் வட இலங்கை இராசதானிக்காலத்தில் உருவான மருத்துவ - சோதிட இலக்கிய மூலாதாரங்கள் ஆகியன இவ்வரசின் அரசியல் வளர்ச்சி பற்றியும், பொருளாதாரச் செழிப்புப்பற்றியும் தனித்துவம் வாய்ந்த குடியேற்றங்களினாலான சமூகக் கட்டமைவு பற்றியும் உறுதிப்படுத்திக்கொள்ள உதவுகின்ற சான்றுகளாகும்.

**நல்லூர் இராசதானி மரபுகளோடு அடையாளம் காணப்பட்ட தொன்மங்கள்**

1. விஸ்ணு புத்திர வெடியரசன் பற்றிய தொன்மம்
2. மாருதப்புரவீகவல்லியுடன் தொடர்பு படுத்தப்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பற்றிய தொன்மம்

3. உக்கிரசிங்கனுடன் தொடர்புபடுத்தப் பட்ட கதிரமலை மற்றும் செங்கடகலநகரி பற்றிய தொன்மம்
4. யாழ்ப்பாடி அல்லது அந்தகக்கவி வீரராகவனுடன் தொடர்புபடுத்தப்பட்ட மணற்றி பற்றிய தொன்மம்
5. தென்னிலங்கை மன்னனொருவனின் பட்டத்து இராணியின் தீராநோயைத் தீர்த்து வைத்த சிங்கையாரியன் பற்றிய தொன்மம்

இத்தொன்மங்களை பதிவு செய்து வைத்த இலக்கியங்களின் இயல்புகளும் அவற்றின் பொருளடக்கங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மேலும் இத்தொன்மங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள முறையில் பாடபேதங்கள் காணப்படுகின்ற வகையினையும் அவதானிக்க முடிகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட தொன்மங்களை அவை பதிந்து வைத்துள்ள கருத்தாடல் களத்தின் உள்ளடக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு காலப்பாகுபாடு செய்ய முடிகின்றது. அவையாவன:

1. கி.பி 4 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டகால கட்டத்திற்குரிதாக எமக்கு உதவுகின்ற இரண்டு தொன்மங்களாக கிடைப்பவை விஸ்ணு புத்திர வெடியரசனைப் பற்றியதும் சோழ நாட்டு இளவரசியான மாருதப்புரவீகவல்லி பற்றியதுமாகும். வெடியரசனைப்பற்றிய தொன்மம் (நெடுந்தீவின் கடலரசன்) நெடுந்தீவோடு தொடர்புபடுத்தப்பட்டும், மற்றையது மாவிட்டபுரம்கந்தசுவாமி ஆலயத்துடனும் தொடர்புபடுத்தப் பட்டவகையிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொன்மங்களும் நல்லூருக்கு முந்திய (குடாநாட்டின்) அரசமரபுகளுடன் இணைக்கப்பட்டு கூறப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும். மாருதப் புரவீகவல்லி பற்றிய தொன்மம் கி.பி 8 ஆம் நூற்றாண்டிற்குரியதாக கொள்ள ப்படும் அதேவேளையில் நாகதீபத்தின் அரசமுறையில் மாற்றம் ஏற்பட்டுக் கொள்வதனைக் குறிப்பதற்காக சோழவம்சத்தின் மரபான மாருதப் புரவீகவல்லி பற்றிய தொன்மத்தினூடாக அது இணைத்து வைக்கப் பட்டுள்ளமையை உணர முடிகின்றது.
2. உக்கிரசிங்கனுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ள கதிரமலை மற்றும் செங்கட கலநகரி பற்றிய தொன்மம் ஆட்சிமுறையில் ஏற்பட்ட தலைநகரமாற்றத்தினை குறித்து எழுந்ததெனக் கொள்ள முடியும். கதிரமலையிலிருந்து செங்கடகலநகரிக்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பின்னரே நல்லூர் தலைநகராகக்கப்பட்டதாக சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இது கி.பி 8 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட நிகழ்வாக அமைந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது. ஆனால் செங்கட கலநகரி எங்கே அமைந்திருந்தது என்பது இன்னும் அடையாளம் காணப் படவில்லை.
3. யாழ்ப்பாடி அல்லது அந்தகக்கவி வீரராகவனுடன் தொடர்புபடுத்தப்பட்ட மணற்றி பற்றிய தொன்மம் நல்லூர் இராசதானியுடன் தொடர்புபட்டதாக உள்ளது. மணற்றி என்று குறிக்கப்பட்ட பிரதேசம் அல்லது கிராமம் அல்லது நாடு இன்னும் அடையாளம் காணப்படவில்லை. இவை யாவும்வட இலங்கையில் ஏற்பட்ட குடியேற்றங்கள் தொடர்பான பதிவுகளில் இணைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.
4. தென்னிலங்கை மன்னனொருவனின் பட்டத்து இராணியின் தீராநோயைத்

| | விஸ்ணுபுத்திரவெடியரசன் தொன்மம் (நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்பற்றது | மாருதப்புரவீகவல்லி - வாலசிங்கன் தொன்மம் ( நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்புற்றது | உக்கிரசிங்கன் கதிரமலை-செங்கடகலநகரி தொன்மம் (நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்புற்றது. | யாழ்பாடி / அந்தகக்கவிவீரராகவன் தொன்மம் (நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்புற்றது | தென் இலங்கைப் பட்டத்துராணியின் சூலைநோயைத் தீர்த்தசிங்கையாரியன் தொன்மம் |
|---|---|---|---|---|---|
| கைலாயமாலை | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | பெயர் குறிப்பிடாமல் சோழன் மகளொருத்தி குறிப்பிடப் பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | வரராசசிங்கனிடமிருந்து வட இலங்கையை யாழ்ப்பாடி பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| வையாபாடல் | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | குதிரைமுகம் நீங்கப் பெற்றமை சொல்லப்படல் அரச குமாரியின் பெயர் குறிக்கப்படவில்லை | சொல்லப்படவில்லை | விபீஷணனது ஆட்சியில் அவனது அரண்மனையில் யாழ் வாசித்து மன்னனைப் பெரிதுங் கவர்ந்த யாழ்ப்பாடி மணற்றிடலைப் பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| யாழ்ப்பாண வைபவ மாலை | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | திசையுக்கிரசோழன் மகளாக மாருதப் புரவீகவல்லி குறிக்கப்பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | இருகண்களும் குருடனான யாழ்ப்பாணன் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த ஏலேலசிங்கனது அரண்மனையில் யாழைமீட்டு பாடல் பாடி மணற்றியை பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| புராதன யாழ்ப்பாணம் | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | திசையுக்கிரசோழன் மகளாக மாருதப் புரவீகவல்லி குறிக்கப்பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | இருகண்களும் குருடனான யாழ்ப்பாணன் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த ஏலேலசிங்கனது அரண்மனையில் யாழைமீட்டு பாடல் பாடி மணற்றியை பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| யாழ்ப்பாண வைபவ விமர்சனம் | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | திசையுக்கிரசோழன் மகளாக மாருதப் புரவீகவல்லி குறிக்கப்பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | யாழ்ப்பாணன் தனது பிரதேசத்தினை ஆளுவதற்கு ஒரு புதல்வனை அனுப்புமாறுவட நாட்டு மதுரையிலுள்ள குலகேதுமன்னனை வேண்ட அம் மன்னன் கையொன்றுசொத்தியாகவுள்ள தன் புதல்வனை அனுப்பி வைந்தான் | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| யாழ்ப்பாண வரலாறு by முத்துத்தம்பி | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப்படவில்லை | மாருதப் பிரவாகவல்லி சோழராசன் புத்திரி எனவும் குதிரைமுகமென்னும் நோயினத் தீர்ப்பதற்காகவுமே கீரிமலைச் சாரலுக்கு வருகை | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | ஏலேலசிங்கனின் அனுராதபுர அரண்மனைக்குச் சென்று யாழ் மீட்டு கவி பாடி மணற்றியைப் பரிசாகப் பெற்று, மணற்றியில் நல்லூரில் தனக்கென ஒருமாளிகையும் கட்டிய அந்தகக்கவி | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| கண்ணகிவழக்குரை | வெடியரசனைப் பற்றிய தொன்மம் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின்படி ஆட்சி கி.பி 2 ம் நூற்றாண்டு. முக்குளி நாகர்களின் தலைவனாக வெடியரசன் | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| தக்ஷிணகைலாச-புராணம் (கந்தபுராணம்) | இந்திரனுக்கிடப் பட்ட துருவாச முனிவரின் சாபத்துடன் தொடர்புபடுத்தி வெடியரசனைப் பற்றிய தொன்மம் | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை |
| பரராசசேரம் | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்பட்டுள்ளது |

தீர்த்து வைத்த சிங்கையாரின் பற்றிய தொன்மம் நல்லூர் இராசதானியுடன் உள்ள தொடர்பினை உறுதிப்படுத்துகின்றது.

**யாழ்ப்பாணக் குடியேற்றங்கள் பற்றிய பதிவுகள் (Register for Jaffna Tamil Colonization)**

பரதகண்டத்திற்கும் இலங்கைத்தீவிற்கு மிடையிலான மக்களிடப்பெயர்வுகளும் குடியேற்றங்களும் கற்காலத்திலிருந்தே தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. கடந்த 70000 வருடங்களுள் 17 தடவைகள் தென்னிந்திய - இலங்கை நிலத்தணிவுகள் பாக்கு நீரிணையிலுள்ள நீர்பரப்பு பின் வாங்கியமையினால் இணைக்கப்பட்டதாக தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் (Deraniyagala, S.U., Pre- Historic Basis for the rise of Civilization in SriLanka and Southern India, 2004,p.3) இக்காலப்பரப்பில் நிகழ்ந்ததாகக் கருதப்பட்ட உள்வரவு - வெளியேற்றங்களுக்கான பதிவுகள் எமக்கு நேரடியாகக் கிடைத்திருக்கவில்லை. ஆனால் இலக்கியங்கள் தோற்றம் பெற்ற பின்னரே இத்தகைய இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள் பற்றிய செய்திகள் பதிவிற்குட்படுத்தப்பட்ட தன்மையைக் காண்கின்றோம். இருந்தும் தொல்லியல் அகழ்வாய்வுச் சான்றுகள் மூலம் பெறப்பட்ட தடயங்கள் இவ்வாறான இடப் பெயர்வுகளை ( ஐதீகம் என்ற நிலையைத் தவிர்த்து பார்க்கும் போது ) புறப்பட்ட இடத்திலிருந்து குடியேற்றம் நிகழ்ந்த இடம் வரைக்கும் அக்குறிப்பிட்ட பண்பாட்டு அலகிற்குரிய மக்கள் கூட்டத்தினரின் பண்பாடு வடிவங்களில் தொடர்ச்சியான இணைப்பு நிலையை ஓரளவிற்கு உறுதிப் படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம். வணிகத்திற் காகவும், ஆக்கிரமிப்பிற்காகவும், ஆள் வளத்திற் காகவும் இடப்பெயர்வுகளும் குடியேற்றங்களும் காலந்தோறும் நிகழ்த்தப் பட்டமையை வரலாற்று வளர்ச்சியில் கண்டு கொள்ளவும் முடிகின்றது. வட இந்தியாவிலிருந்தும் தக்கணத்திலிருந்தும் கேரளா என்று குறிப்பிடப்படுகின்ற சேரநாட்டிலிருந்தும் தென்னிந்தியாவின் மத்திய மற்றும் வடகிழக்குப் பரப்பிலிருந்தும் குறிப்பாக கலிங்கத்திலிருந்தும் இலங்கை நோக்கி ஏற்பட்ட அரச குடும்பத்தவர்களதும், போர் வீரர்களதும், வணிக மக்களதும் நகர்வுகள் காலத்திற்குக்காலம் இலங்கை மீது குறிப்பிட த்தக்க மக்கள் எண்ணிக்கையை அதிகரிப்பு செய்திருந்ததோடு, இலக்கிய மரபுகளின் வளர்ச்சிக்கும் அடிப் படையை இட்டு வைத்துள்ளன. ஆட்சியமைக்கும் நோக்கத்திலும், வணிகக் குடியேற்றங்களாகவும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாகவும் வணிக நோக்கிலமைந்த கடல் பயணங்களுக்காக கடல் முகப்புக்களை - துறைமுகங்களை அமைக்கும் நோக்கமாகவும் இங்கு குடியேற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வகையில் வட இலங்கை மீதான இடைக்காலக் குடியேற்றங்கள் யாவும் இந்துசமுத்திரத்திற்கு மறுகரையிலிருந்து வட இலங்கை நோக்கி வந்து குவிந்து கொண்டிருந்த செயற்பாட்டின் தன்மை காரணமாக ஆங்காங்கு வளர்ச்சி பெற்றிருந்த இலக்கிய வடிவங்களும் வடஇலங்கையை வந்தடைந்து கொண்டன. கைலாயமாலை அவ்வாறன ஓர் இலக்கிய மரபின் தொடர்ச்சியாக நல்லூர் இராசதானியின் வரலாற்று வளர்ச்சியைத் தரு கின்றது. கைலாயமாலையின் முற்தொடர்ச்சியை தொண்டைமண்டலத்தின் உள்ள இலக்கிய வடிவங்களுடன் இணைந்து இனங்காணவேண்டிய ஒரு பொறுப்பு யாழ்ப்பாணத்து இலக்கிய வரலாற்றாசிரியர் களுக்குண்டு.

**பல குடியேற்றங்கள் - பல குலமுறைகள்**

இக்கருத்தமைவின் பின்னணியில் வட இலங்கையில் மத்திய காலத்திலிருந்து ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரைக்கும் உள்ள காலப்பரப்பில் உள்ள காலப்பரப்பில் தமிழ் மொழியில் உருவான வரலாற்று எழுத்தியல்

மரபுகளின் வளர்ச்சியின் பின்னணியில் குடியேற்றங்களும் குலமுறைகளும் செலுத்தியிருந்த தாக்கத்தினை மேலே குறிப்பிடப்பட்ட தொன்மங்களினூடாக விளங்க முடிகின்றது. குடியேற்றங்களினதும் குலமுறைகளினதும் விரிந்த செயற்பாடு இங்கு ஆலயங்களின் உருவாக்கத்திற்கும், மரபுகள் தொன்மங்களாக்கப்படுவதற்கும் காரணமாக இருந்திருக்கின்ற ஒரு தன்மையை வட இலங்கையின் வரலாற்று வளர்ச்சியில் காணமுடிகின்றது. கைலாயமாலை முதற் கொண்டு யாழ்ப்பாண வைபவக் கௌமுதி வரைக்கும் எழுந்த தமிழ் மொழியிலான வரலாற்றிலக்கியங்கள் மேற்கூறப்பட்ட கருத்தியலை உறுதிப்படுத்துவனாகவே உள்ளன. அமரர் சு.வித்தியானந்தன் பண்டிதர் பொ. ஜெகந்நாதன் என்பவரது யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

" ....வையாபாடல், கைலாயமாலை, கோணேசர் கல்வெட்டு முதலிய வரலாற்று நூல்கள் அவர்களின் (யாழ்ப்பாணத்தரசர்) காலத்தவை. இவற்றுள் கைலாயமாலை என்பது ஆரியச்சக்கரவர்த்திகள் நல்லூரில் இராசதானி அமைத்து, யாழ்ப்பாண நாட்டில் அரசாட்சி ஏற்படுத்தியமை பற்றி கூறும் சிறப்புடையது. அவர்களின் ஆட்சியில் வன்னி நாட்டின் மீது ஏற்பட்ட படையெடுப்புக்கள், குடியேற்றங்கள், அரசியல் மாற்றங்கள் பற்றிக்கூறுவதே வையா என்ற நூலாகும்.... இவற்றை ஆதாரமாகக் கொண்டே பதினெட்டாம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை எழுதினார்" (ஜெகநாதன், பொ., 1987, giv)

இக்குறிப்பின் அடிப்படையாக நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய வரலாற்று நிகழ்வு எனக் கொள்ளக்கூடியது எங்கிருந்தோ நடைபெற்ற குடியேற்றங்கள் வாயிலாகவே மத்திய கால வட இலங்கையின் இலக்கிய வரலாற்று மரபுகளின் கருப்பொருள் வளர்ச்சி ஏற்பட்டிருந்ததோடு அம்மரபுகளின் பின்னணியில் தல புராணங்களும் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த வகையை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளமையாகும். கைலாயமாலை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டெனலாம். தென்னிந்திய தீபகற்பப் பிராந்தியங்களில் மத்திய காலத்தில் முக்கியத்துவம் பெற்றுக்காணப்பட்ட சமுதாய - சமய - பண்பாட்டு நிறுவனங்களுக்குரிய வடிவங்கள் யாவும் யாழ்ப்பாணத்திலும் அதற்கப்பாலுள்ள வன்னிப் பிராந்தியத்தினை உள்ளடக்கிய குளக் குடியிருப்புப் பிராந்தியங்களிலும் குழும அடிப்படையிலும் பிராந்திய சமூக வட்டகைகளாகவும் நிலைபெற்றுவிட்டிருந்த குடியேற்றங்களில் பெருமளவிற்கு செல்வாக்கு செலுத்தியிருந்தன. இவ்வாறான குடியேற்றங்களுள் முதலாவது குறிப்பிடத்தக்கது தென்னியந்தியாவிலுள்ள மலபார் பிரதேசத்திலிருந்து இங்கு வந்து பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து வல்வெட்டி - உடுப்பிட்டி வரைக்கும் குடியேறியவர்களைக் குறிப்பிடப்படுகின்றது. இரண்டாவது கட்டத்தில் கொரமாண்டல் கரையோரத்திலிருந்தும் அதன் பின்னர் திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களிலிருந்து வந்து தொண்டைமானாற்றின் இரு மருங்கிலும் வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்குப்பரப்பிலும் குடியேறியவர்களைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இறுதியாக கலிங்கத்திலிருந்தும் கொங்கு மற்றும் கர்நாடகப் பிரதேசத்திலிருந்தும் வந்து வட இலங்கை முழுவதிலும் பரவலாகக் குடியேறிய வர்களைப் பற்றிக் குறிப்பிடலாம். இத்தகைய குடியேற்றங்களூடாக வட இலங்கையில் புதிய வரலாற்று மரபுகள் தோற்றுவிக்கப்பட்டு அவை தலவரலாறு, வம்சாதிக்க வரலாறு, சாதி மற்றும் குடிமையுடன் தொடர்புபட்ட சமூகப்பிரிவு பற்றிய வரலாறு என பதிவு செய்யப்பட்டமையைக் காண்கின்றோம்.

ஆனால் இடைக்கால வட இலங்கையில் நிகழ்ந்த முதற் குடியேற்றம் சோழ மண்டலத்திலிருந்து நேரடியாக வந்த முதற்குடியேற்றமா அல்லது மலையாளத் திலிருந்து ஏற்பட்ட முதற் குயேற்றங்களா என்பதனை இன்னும் தீர்மானிக்க முடியவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் ஐதீகங்களான மாருதப்புரவீகவல்லி, ஈழவல்லி மற்றும் அந்தகக்கவிவீராகவன் கதை (யாழ்ப்பாடி கதை) போன்றன முதற் குடியேற்றம் நிகழ்ந்தபின் உருவான வரலாற்று இலக்கிய மரபுகளுடன் இணைத்துக் கூறப்படுகின்ற முறையில் இங்கு நிகழ்ந்த சனத்தொகை முகிழ்ப்பினை உறுதிப் படுத்துகின்ற தொன்மங்களாக உள்ளன. அவ்வாறு வந்த முதற்குடியேற்றம் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கின்' இரு மடங்கிலும் அமைந்து கொண்டது. அவை முழுவதும் பிற்காலச்சோழ வம்சத்தினருக்குரியதான கிராமக் குடியிருப்புக்களாக அமைந்து காணப்பட்டன. வரமராட்சியிலுள்ள உப்பு - வல்லை மற்றும் மண்டான் தொடங்கி, எழுதுமட்டுவாழ் வரைக்கும் அக்குயேற்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சோழங்கன் (சோழ கங்கன்) சோழன் தோட்டம். சோழ உப்புப் புலம் (சோனப்பு) பெரிய தோட்டம், பெரிய மாவில், சின்னமாவில் ஆகியன வடமராட்சியிலுள்ள சோழர் காலக் குடியேற்றங்களாகும். இக்குடியேற்றங்களை இங்கு நிரைப்படுத்திய சக்திமிக்க காரணிகளாக உள்ளூர் சுதேச மனித நடவடிக்கைகள் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் இக்குடியேற்றங்கள் நிகழ்வதற்கு முன்னர் யாழ்ப்பாணக் குடா நாட்டில் வாழ்ந்திருந்த சுதேசிகளது ஆதரவும் இக்குடியேற்றங்களுக்கு கிடைத்திருக்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது. புவியியல் அமைப்பின் அடிப்படையில் வரலாற்றுக் குடியேற்றங்கள் பெருமளவிற்கு வலிகாமம் வடக்குபிரதேசத்தினை குறிப்பாக வழுக்கியாற்றினை மையப் படுத்தியும் வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குடியிருப்புக்கள் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்தினை மையப் படுத்தியும் மத்திய கால வரலாற்றுக்குடியேற்றங்கள் தொண்டைமானாற்றின் வடிநிலத்தினையும், வலிகாமத்தின் மத்திய - மைய நிலப்பரப்பினை மையப் படுத்தியும் அமைந்து கொண்டமையை அவதானிக்க முடிகின்றது. இத்தன்மையினையே மத்திய காலத்திலும் பிற்காலத்திலும் இங்கு எழுந்த தமிழ் இலக்கியங்கள் சித்தரிப்பதனைக் காண்கின்றோம்.

**கைலாயமாலை - யாழ்ப்பாணக் குடியேற்றம் பற்றிய முதலாவது பதிவேடு**

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் அரசின் முதற்பதிவேடு கைலாயமாலை என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே வேறுபாடான கருத்துக்கள் நிலவுவது மிகக்கடினம். ஆனால் கைலாயமாலை என்ற தலைப்பில் உருவாக்கப்பட்ட இவ்விலக்கிய ஏடானது முத்துராசக்கவிராயர் என்ற அரண்மனைப் புலவர் ஒருவரால் பாடப்பட்டது என்பதும் இவர் தொண்டைமண்டலத்திலுதித்த சோழ வம்சத்தவர் என்பது அதன் பாயிரத்திலிருந்து அறிய முடிகின்றது. பேராசிரியர் எஸ். பத்மநாதன் தனது நூற்குறிப்பில் கைலாயமாலைபற்றித்தருவது இங்கு பயனுடையதாக அமையும்.

"... கைலாயமாலை சிங்கையாரியன் நல்லூரில் அமைத்த கைலாசநாதர் கோவிலின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டுள்ளது. எனினும் சிங்கையாரியனைப் பற்றியும் அவனோடு வந்த பிரதானிகளைப் பற்றியும் நூலிற் பல விபரங்கள் உள்ளன. அத்துடன் யாழ்ப்பாண நாட்டிற் சிங்கையாரியன் செய்த நிர்வாக ஏற்பாடுகளைப் பற்றியும் பல விபரங்களை கைலாயமாலை தருகின்றது. (பத்மநாதன், எஸ், 2004: ப.55) பொ. ஜெகந்நாதன் இந்நூலின்

முக்கியத்துவத்தினை பின்வருமாறு தருகின்றார். "இந் நூலிற் காணும் ஒரு தனி வாய்மை என்னவென்றால் கைலாய மாலை என்னும் அத்தலைப்பெயர் கைலாயக்கடவுள்மேலே பாடப்பட்ட ஒரு தோத்திரப் பாமாலையாகவும் இருக்காமல் அல்லது அக் கோயிலைக் கொண்ட சுவாமியைப் பற்றிய வரலாறுகளைப் பற்றி மாத்திரம் அமையாமல் ..... அது நல்லூர் இராச்சியத்துக்காக ஆக்கப்பட்ட நூல் என்க ..... இக்குடியேற்றத்தினைப் பாண்டிமழவன், மன்னன், புவனேகபாகு மூன்றுபேரும் சேர்ந்துதான் செய்திருக்கிறார்கள். இது இராசபரம்பரையும் நல்லூர்க் குடிமக்களும் அறிய வேண்டும் என்று அவர்களே பாடுவித்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள்" (ஜெகந்நாதன், பொ., 1987, பக்.20-21). ஆகவே கைலாயமாலை நல்லூர் இராசதானியை மையமாக வைத்து ஏற்படுத்தப்பட்ட முதற் குடியேற்றங்களைப் பற்றி குறிப்பிடும் இலக்கிய வடிவமாக அமைந்தது என்பதில் ஐயம் எதுவும் எழ முடியாது. கைலாய மாலையை ஆராய்ந்தவர்கள் அந்நூல் தோற்றுவிக்கப்பட்ட காலம் தொடர்பாக பல்வேறு கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் நல்லூரில் முதற்தமிழ்ச் சங்கம் அமைத்த முதற்செய்தியை அந்நூலின் 210 ஆவது பாடலிலிருந்து உறுதிப்படுத்துவதில் ஒற்றுமைத்தன்மையை கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் குடியேற்றங்களோடு எழுந்த தமிழ்ச் சங்கமரபானது தமிழ்மொழிப் புலமையாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து நல்லூருக்கு வரவழைக்கப்பட்டதோடு அவ்வழியே புலமைகொண்ட அங்கத்தவர்களது குடியேற்ற முறைமையை வலுப்படுத்தும் ஒரு நிறுவனமாக தமிழ்ச்சங்கம் வட இலங்கையில் தொழிற் பட்டிருந்த வகையைக் காணமுடிகின்றது (ஞானம் பாலச்சந்திரன், 2015 (1) ப.13), கைலாயமாலை நூலின் துணைக் கொண்டும் பாவலர் சரித்திர தீபகம் நூலின் துணைக்கொண்டும் யாழ்ப்பாண மன்னர்களினால் நிர்வகிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் தொடர்பாக கீழ்க்கண்ட விடயங்களை வரலாற்றாய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1. யாழ்ப்பாண மன்னர்கள் தமிழ்ச்சங்கத்தினை நிறுவினர்.
2. மன்னர்களால் பலநூல்கள் செய்விக்கப் பட்டுள்ளன.
3. ஈழத்துப்புலவர்கள் மட்டுமல்லாது மதுரை யிலிருந்த (தமிழகத்திலிருந்த) புலவர் களும் இச்சங்கத்தின் சேவைகளில் பங்கேற்றுள்ளனர்.
4. புலவர்களுக்கு படிச்சம்பளம் கொடுப்பதன் வாயிலாகவோ சன்மானம் வாயிலாகவோ புலவர்களை மன்னர் ஊக்குவித்துள்ளனர்
5. பலநூல்கள் நல்லூருக்கு கொண்டு வரப் பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன (ஞானம் பாலச்சந்திரன், 2015 (1), ப214)

மேலே தரப்பட்ட ஆய்வு முடிவுகள் மத்தியகால வட இலங்கையில் தமிழ் மொழிப் பாண்டித்தியம் வல்லவர்கள் மாத்திரமல்ல ஏனைய அறிவியல்துறை வல் லவர்களையும் குடியேற்றும் ஓர் (இடைக்கால) மையமாக நல்லூரும் வட இலங்கையும் விளங்கியிருந்தமையை தெளிவாக்குகின்றன. இப் பின்னணியில் நல்லூரிலுள்ள நாயன்மார்கட்டில் **சரஸ்வதி மஹால்** என்ற மைக்கப்பட அரண்மனை நூலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டு, தமிழகத்திலிருந்தும் பிற பிரதேசங்களிலிருந்தும் நூலாக்கங்கள் பெறப்பட்டு வடஇலங்கையின் கல்வி நிலை வளர்த்தெடுக்கப்பட்டமையைக் காண முடிகின்றது. வட இலங்கையின் சிந்தனை மரபிற்கு (கந்தபுராணச் சிந்தனை மரபிற்கு) நாயன்மார்கட்டில் அமையப்பெற்றிருந்த அறிவியல்கழகமும் அதனோடு இணையப் பெற்றிருந்த **சரஸ்வதி மஹால் நூலகமும்** பெரும்பணியாற்றியிருந்தமை பற்றிய தொன்மம் இன்னும் விரிவாக ஆய்வு செய்யப்படாமல் இருப்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

எவ்வாறெனினும் மத்திய கால வட இலங்கைத் தமிழ் மக்களது அறிவியல் வாழ்வில் நல்லூரில் அமையப் பெற்றிருந்த **சரஸ்வதி மஹால்** பெரும் பங்காற்றியிருந்தமையை ஆய்வாளர் எவருமே மறுக்கமுடியாது. அப்பின்னணியிலேயே வட இலங்கையில் நிகழ்ந்த குடியேற்றங்கள் யாவும் இலக்கியங்களில் தொன் மங்களாக பதிவேற்றம் செய்யப்பட்டு அந்நூலகத்திலேயே பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

**வையாபாடல் - யாழ்ப்பாணத்து குடியேற்றம் பற்றிக் குறிப்பிடும் இரண்டாவது பதிவேடு**

வையாபாடல் வடஇலங்கையில் மத்திய காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட குடியேற்றம் தொடர்பாகப் பேசுகின்ற இரண்டாவது இலக்கிய வடிவமாகும். போர்த்துக்கேயர் காலத்தின் தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பட்ட இந்த இலக்கிய வடிவமானது வன்னிக் குடியேற்றங்கள் பற்றிய விபரங்களைத் தருவதும் தமிழகத் திற்கும் வன்னிக் குமிடையிலான அரசியற் தொடர்புகளை விபரிப்பதுமாகக் காணப்படுகின்றது. வையாபுரி ஐயரால் பதிவேற்றம் செய்யப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் பற்றிய இத்தொகுப்பானது தோற்றம் பெறுவதற்குக் காரணமாக போர்த்துக்கேயரால் வட இலங்கைப் பண்பாட்டிற்கேற்பட்ட பாதிப்புக்களின் தாக்கமே என வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றது. வையாபாடல் என்ற தலைப்பினை எடுத்து நோக்கும் போது அது ஒரிடத்தினையோ அல்லது தலத்தினையோ குறித்து நிற்காது ஒருவருடைய பாடல் என்ற கருத்தில் வெளிப்பட்டு நிற்பது தெளிவாகின்றது. "வையாபாடல் என்னும் நூல் கி.பி16 ஆம் நூற்றாண்டிலே வையாபுரிஐயரால் எழுதப்பட்டதென்பர். அது அடங்காப்பற்று வன்னியில் ஏற்பட்ட குடியேற்றங்களையும் படையெடுப்புக்களையும் வர்ணிக்கின்றது. தம்பலகாமம், திருகோணமலை, திரியாய், வெருகல், யாழ்ப்பாணம் ஆகியனவற்றிலே குடியேறப்பட்டவர்களது குறிப்புக்களும் அதில் அடங்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பாண்டியர் படையெடுப்புக்களைப் பற்றிய சில மரபுவழிக்கதைகளையும் 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட சமூக நிலைகளையும் ஆதாரமாகக் கொண்டு வையாபாடல் உருவாக்கப்பட்டது' பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகின்றார் (பத்மநாதன். சி., 2004 ப.vi). குடியேற்றங்களைப் பதிவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட இலக்கிய வடிவங்களுக்கு வையா பாடல் ஒரு சிறப்புதாரணமாகும்.

**யாழ்ப்பாண வைபவமாலை - வட இலங்கையின் முதல் வரலாற்று வரைபு**

17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மயில்வாகனப் புலவரால் யாழ்ப்பாண வைபவமாலை எழுதப்பட்டது. இக்காலத்தில் கவர்ணராக இருந்த மேக்கறூனின் (கி.பி. 1739) வேண்டுகோளின்படி மயில்வாகனப் புலவர் இந்த நூலை எழுதினார். மயில்வாகனப் புலவரால் யாழ்ப்பாணத்தின் முற்கால நிகழ்ச்சிகளை ஒரு மாலை போல் கோர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. இவரைப் பற்றி பிற்காலப்பகுதியிலும் தமிழர் வரலாற்றைப் பற்றியும் யாழ்ப்பாண வரலாற்றை பற்றியும் எழுதியவர்கள். "வைபவம்" "வைபவகௌமுதி" என்ற சொற்கள் அவரவர் நூல்களின் தலைப்பில் இணைத்துக் கொண்டனர். யாழ்ப்பாண இராச்சியம் என்ற ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பில் வி.சிவசாமி எழுதிய வரலாற்று மூலங்கள் என்ற அத்தியாயத்தில் யாழ்ப்பாண வைபவமாலை தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

"இது யாழ்ப்பாணத்தின் வைபவத்தினை - சிறப்பினை - சீரினை - மகிமை யினை - வரலாற்றினைக்கூறும் நூல் எனப்பொருள்படும். மாதகலைச் சேர்ந்த மயில்வாகனப் புலவர் சமகால யாழ்ப் பாணத்திலே ஒல்லாந்தத் தளபதியாகவும், தேசாதிபதியாகவும் 1736 இலே இருந்த மகெறல்ஸ்ன்அவரின் ஆலோசனைக்கேற்ப இந்நூலை எழுதினார் எனக் கூறப்படுகின்றது. ஏறக்குறைய இதே காலப்பகுதியிலே தான்

கோணேலியஸ் ஜோன் சீமோன் எனும் ஒல்லாந்த தேசாதிபதி யாழ்ப்பாணத்தமிழ் மக்கள் மத்தியிலே பாரம்பரியமாக நிலவி வந்த பழக்கவழக்கங்களை - தேசவழமையினைத் தொகுப்பித்தான் என்பதும் குறிப்பிடற்பாலது. வைபவமாலையின் முன்னுரையில் ஆசிரியர் தான் பயன்படுத்திய நான்கு நூல்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் முற்குறிப்பிட்ட இரண்டையும் தவிர ஏனையவை இன்றுவரை கிடைத்ததில். அவற்றுள் ஒன்றான இராசமுறை மன்னர்களின்பெயர்களையும்சாதனைகளையும் கால ஒழுங்கின்படி கூறியிருக்கலாம். இவ்வகையிலிது இந்தியா விலே பேணப்பட்டு வந்த வம்சாவளி, இலங்கையிலே எழுதப்பட்ட இராசாவலிய முதலியவற்றுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கலாம்". (சிற்றம்பலம். சி.க. தொ ஆ; **யாழ்ப்பாண இராச்சியம் 1992, ப.14).**

1879 ஆண்டில் பிரிட்டோ என்பவர் யாழ்ப்பாண வைபவமாலையைத் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார். பிரிட்டோவின் மொழி பெயர்ப்பு யாழ்ப்பாணத்தமிழர்களின்வரலாற்றுணர்வின் வெளிப்பாடு தான் பிரிட்டோவிற்கு முன்னரே 1845 ஆம் ஆண்டில் உதயதாரகை வரலாறு பற்றிய கட்டுரைத் தொடரை வெளியிடத் தொடங்கியது. இத்தொடர் 1855 வரை தொடர்ந்தது. டானியல் பூவர் என்ற வரை தொடர்ந்தது. டானியல் பூவர் என்ற அமெரிக்க மிசனரியால் 1841ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை இக்கட்டுரைத் தொடரை வெளியிட்டமை யாழ்ப்பாணச் சரிதம் பற்றி மக்கள் காட்டிய ஆர்வத்தை வெளிப்படுத்தியதாகக் கொள்ளலாம். காரணம் இலங்கையின் வரலாறு சிங்கள் அரசர்கள் வரலாறாகவே எழுதப்படுகின்றது. அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தின் வரலாறு புறக்கணிக்கப்படுகிறது. என்ற குறையும் இக்கட்டுரைத் தொடரில் சுட்டிக் காட்டப்பட்டது. பிரிட்டோவின் வைபவமாலை மொழி பெயர்ப்பின் பின்னிணைப்பாக இலங்கையில் மொழிகளின் வளர்ச்சி பற்றிய கட்டுரை ஒன்றை பிரிட்டோ சேர்த்திருந்தார். சிங்களம் ஆரிய மொழி அன்று அது திராவிடத்தில் இருந்து கிளைத்த மொழி என்ற கருத்தை பிரிட்டோ தனது கட்டுரையில் முடிகிறது. அவரது கருத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் இலங்கைத் தமிழருக்கு ஒரு பழமையான வரலாறு இருந்தது; அது மொழியின் வரலாறாக நீண்டதாக இருக்குமாயின் அதைப் பேசும் மக்களும் இந்த நாட்டில் பண்டைக்காலம் முதலே இருந்து வந்துள்ளனர் எனக் குறிப்பிடலாம். இது தமிழர் சிந்தனையில் ஒரு புதிய திருப்பத்தினை தந்திருந்த போதும் அகண்ட தென்னிந்தியாவின் பண்பாட்டுப்பரப்பின் தொன்மத்துடன் பற்றிய தம்மை இணைத்து நோக்கிய தமிழர்களுக்கு இலங்கையில்தாங்கள்இருப்பு பற்றிய வரலாறுப் பதிவின்மை பற்றிய சிந்தனை அக்காலத்தில் தோன்றியிருக்கவில்லை.

சாமுவேல் யோன் என்பவர் 1879ல் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலை எழுதினார். இக்காலம் முதல் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற தலைப்பில் பல நூல்கள் வெளிவரலாயின. அவற்றுள் சிலவற்றின் விபரம் பின்வருமாறு:

1. வி.சதாசிவப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவம் 1884
2. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணச் சரித்திரம் 1912
3. கே. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவகௌமுதி 1918

இந்த நூல்கள் யாழ்ப்பாண வைபவமாலை யினை பிரதான மூலமாகக் கொண்டே வட இலங்கை வரலாற்றைக் கூறிச் செல்கின்றன. ஆனால் இந்நூல்களில் விபரிக்கப்பட்ட தமிழர் குடியேற்றம் தொடர்பான தொன்மங்கள் பற்றிய விபரிப்புக்கள் தளம் மாறி, இடம்மாறி பதிப்பிக்கப்பட்டமையைக் காணமுடிகின்றது.

உதாரணமாகக் குறிப்பிடும் போது **யாழ்ப்பாடி** பற்றிய தொன்மம் அதாவது யாழை மீட்டு மணற்றியை பரிசிலாக பெற்றுக் கொண்ட நிகழ்வின் தளம் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த ஏலேலசிங்கனது அரண்மனையில் நிகழ்ந்துள்ளமையை ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையும் உக்கிரசிங்கனது மகனான செயதுங்கபரராசசிங்கனின் சிங்கை நகரில் உள்ள அரண்மனையில் நிகழ்ந்தது என முதலியார் இராசநாயகமும் பதிந்து வைத்துள்ளமையைக் காணமுடிகின்றது.

முதலியார் செ. இராசநாயகம் இந்தியத் தொடர்பை அழுத்திக் கூறுவதற்குப் பதிலாக வட இலங்கையில் தமிழர்களின் வரலாற்றுத் தொடர்ச்சியை இனங்காணப்பட்ட தொன்மங்களூடாக விபரிப்பதிலேயே அக்கறை காட்டினார். பின்னர் சில வரலாற்றாசிரியர்கள் செ. இராசநாயகத்தின் நோக்கு முறைக்கு மாறுபட்ட முறையிலும் எழுதினர். குறிப்பாக தமிழ்க் கல்வெட்டியல் ஆய்வு வளர்ச்சி பெற்ற நிலையில் இலங்கையில் சோழர் ஆட்சி பற்றிய தகவல்கள் பல வெளிவரத்தொடங்கியபோது தமிழரின் வரலாறு பற்றிய பன்முகநோக்கை தொன்மங்களூடாக விளக்க முற்பட்டுக் கொண்டனர். சோழர் படையெடுப்பு இலங்கையில் அதன் தாக்கம், குறிப்பாக திருகோணமலையில் சோழர்விட்டுச் சென்ற தடயங்கள் ஆகியன தமிழரின் வரலாறு பற்றிய பன்நோக்கு முறைகளை முன்வைக்க இடமளித்தது. தமிழ்ச் சாசன மரபுகளும் மத்தியகால தமிழ் இலக்கிய மரபுகளும் ஐதீகங்களையும் தொன்மங்களையும் இனங்காணத் தூண்டின. கோணேசர் கல்வெட்டு, தக்ஷிண கைலாய மான்மியம் என்பன தொன்மங்களையும் ஐதீகங்களையும் இணைந்து வைத்த இலக்கிய வடிவங்களாக தோற்றம் பெற்றன.

இப்பின்னணியில் வட இலங்கைத்தமிழர் மரபுகள் குறிப்பாக இலக்கிய வரலாற்று மரபுகள் என்ற நோக்குநிலையில் பதிகம், தோத்திரம், சிந்து, கும்மி, குளிர்த்தி, அகவல், விருத்தம், ஊஞ்சல் பள்ளு என்று தமிழ் இலக்கிய உறுப்புக்கள் யாவும் மத்திய காலப்பரப்பிலிருந்தே வட இலங்கையில் உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்தோடு, குடியேற்ற அலைகளினூடாக நிகழ்ந்த சம்பவங்களின் கோவையாக வரலாற்றுப் பதிவுகளும் இவ்விலக்கியங்களினூடே ஆரம்பித்து வைக்கப்பட்ட முறையைக் காண்கின்றோம். இவ்வரலாற்றுப்பதிவுகளின் பின்னணியில் ஏற்பட்ட குடியேற்றங்களுடன் புதிய வாழ்க்கையைத் தொடங்கிய புதிய வருகையாளர்கள் சுதேசிகளுடன் இணைந்து தம்முடைய தொன்மங்களை இலக்கிய வடிவமாக வடிவமைத்துக் கொண்டதோடு அவற்றினைத் தென்னிந்தியாவுடனும் பிணைத்தும் குறிப்பாக சிதம்பரத்துடனும் மதுரையுடனும் இணைத்து ஒரு நீண்ட வரலாற்று மரபினையும் உருவாக்கிக் கொண்டனர். இக்காரணத்தினாலேதான் வட இலங்கையின் வரலாற்றெழுத்தியலில் தமிழகத் தொடர்புகள் அழுத்தப் பட்டு வரைப்பட்டநிலையில் நீண்ட பாரம்பரியத் துக்கான தேடல் இத்தொன்மங்களூடாக எடுத்துக் காட்டப் படுகின்றது.

மத்திய கால வட இலங்கைத் தமிழர் பண்பாட்டு வரலாறு பற்றிய எழுத்துக்களினூடாக கடந்த ஐந்து தசாப்த காலங்களாக சொல்லப்பட்டுக் கொண்டு வந்த தகவல்களின் பின்னணியில் தொன்மங்கள் எவ்விதத்திலும் முக்கியத்துவத்தினைப் பெற்றிருக்கவில்லை. எவ்வாறெனினும் தொல்லியல் சான்றுகள் வாயிலாக மத்திய கால நல்லூர் பற்றிய தொன்மங்களை உறுதிப்படுத்தப்படுவதற்கு இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றன. இலங்கைத்தீவின் வரலாற்றைக் கூறிச்செல்லும் மகாவம்சம்தரும் தமிழர் வரலாற்றிற்கு எதிர்த்திசையில் வடஇலங்கைத்

தமிழரின் தொன்மையான அரசமரபின் வரலாற்றிருப்பினை நிலைநிறுத்தும் பொருட்டு இங்கு தொல்லியல் தடயங்கள் தேடி எடுக்கப்பெற்று ஆராயப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் கிடைக்கப் பெற்றுள்ள சேது வகை நாணயங்களுள் சிலதங்க, வெள்ளி உலோக நாணயங்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் குடியேற்ற செயற்பாடுகளூடாக நிர்வாக - சமூக மையமாக்கப்பட்ட நல்லூருடன் அடையாளம் காணப்பட்ட தொன்மங்கள் தொடர்பாக மேற்கிளம்பும் மூன்று கருத்துக்களை முடிவுரையாகப் பின்வருமாறு குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவையாவன:

1. வட இலங்கைத் தமிழர் தொடர்ச்சியான பண்பாட்டுக்கட்டமைவை அல்லது பண்பாட்டு அடுக்குகளை அதே நிலப்பரப்பரப்பில் தொடர்ச்சியாகக் கொண்டிருக்கவில்லை என்பதனை மத்திய காலப்பரப்புக்குரியதாக அடையாளம் காணப்பட்ட தொன்மங்கள் (antecedent) வெளிப்படுத்துகின்றன. பொதுவாக சமூகவியல் மற்றும் மானிடவியல் ஆய்வுகளின் பின்னணியிலேயே குறிப்பிட்ட சமூகக் கட்டமைவின் இருப்பு, பண்பாட்டுக் கலப்பு, சமூக உருவாக்கம், அதனை உருவாக்கியவர்கள் தொடர்பாகவோ அல்லது மூத்ததொல்குடிகள் தொடர்பாகவோ எடுத்து ஆராயப்படுகின்ற நிலையில், நல்லூரில் குடியேறியிருந்த திராவிடக்குழுமங்கள் பற்றிய ஆய்வுகளுக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலையில், நல்லூரின் தொன்மை மத்திய காலத்துடனே தொடங்க வேண்டியுள்ளது. மணற்றியைப் பரிசிலாகப் பெற்ற யாழ்பாடி பற்றியும், தென்னிலங்கையில் ஆட்சி செய்த சிங்கள மன்னனொருவன் தனது இராச்சிய உரித்தற்ற மகிஷியின் ஓர் ஆண்குழந்தையான **அந்தகக் குமாரனுக்கு** நாகதீப அரசினை கொடுத்தமை பற்றியும், தென்னிலங்கை இளவரசியொருத்தியின் சூலைநோயைத் தீர்த்த சிங்கையாரியன் பற்றியும், கந்தரோடையிலிருந்து உக்கரசிங்கன் செங்கடலநகரிக்கு தலைநகரை மாற்றியமை பற்றியும் குறிப்பிடுகின்ற தொன்மங்கள் தொடர்பாக இன்னும் சொல்லாடல் செய்ய வேண்டிய அடிப்படையான பொறுப்பினை நாம் கொண்டுள்ள நிலையில் மத்திய காலத்திற்கு முற்பட்ட வட இலங்கைத் தமிழர்க்குரிய அரச மரபுகளை இனங்காண்பதில் முரண்பாடான நிலையே எஞ்சியுள்ளன என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

2. நல்லூர் இராசதானியின் உருவாக்கத்தின் பின்னணியில் பௌத்தமதத் தொடர்பற்ற நிலையில் வட இலங்கையில் நிகழ்ந்த திராவிட இனக்குடியேற்றமுறைச் செயற்பாடுகளே அடிப்படையாக இருந்துள்ளன. ஆனால் ஆதிமுதல் இங்கு திராவிட இனத்தவர்களே வாழ்ந்திருந்து வந்துள்ளனர் என்பதனை ஆணித்தரமாக நிறுவுவதற்கு எத்தகைய தொல்லியற் சான்றுகளும் நல்லூரில் இதுவரையில் கிடைக்கவில்லை. நல்லூரை அரசியல் தலைநகராகக் கொண்டு சுதந்திர ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு இந்து திராவிடக்குழுமத்தவர்களுக்குரியதாக பேரரசக் கட்டமைப்பினைக் கொண்டிருந் திருப்பினும் இங்கு அரசவாரிசுரிமைக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டபோதெல்லாம், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தென்னிந்தியாவில் தமிழகத்திலிருந்தே இளவரசர்கள் அல்லது அரசவம்சத்தவர் வருவிக்கப்பட்ட நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தமையை இத்தொன்மங்கள் மிகவும் ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளன. அந்தவகையில் தில்லைச்சிதம்பரத்தினை நோக்கிய ஓர் அரசாக நல்லூர் ஆரியச் சக்கரவர்த்திகள் அரசு காணப்பட்டது என்பது தொன்மங்களால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

3. முற்பட்ட காலத்து வடஇலங்கைப் பண்பாடனது மொழி மற்றும் கலை பண்பாட்டடிப்படையில் தனித்துவமாக வளர்ச்சியடைந்து வந்தது என்று குறிப்பிடு வதைவிட பௌத்தத்துடன் (தமிழ்ப் பௌத்தத்துடன்) இணைந்தே வளர்ச்சி பெற்று வந்தது எனக்குறிப்பிடுவது பொருள் மிக்கதாகும். நல்லூர் இராசதானியின் உருவாக்க காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் இலங்கையில் பௌத்தத்துடன் இந்துமதமும் இணைந்தே வளர்ச்சியடைந்து வந்திருந்தமைக்கான தொல்லியற் தடயங்கள் இலங்கைத்தீவில் பரவலாகக் கிடைத்துள்ள நிலையில், வட இலங்கையில் தனித்துவமான நிலையில் தமிழ்த்தொன்மங்கள் உருவாக முடியாதிருந்த ஒரு பண்பாட்டுச் சூழல் காணப்பட்டிருந்தமையை இம் முடிவுரையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அக்காலத்தில் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகி மரபுகள் பௌத்த - இந்து மதங்களின் வாழ்வியற் சூழலை மையப்படுத்தி வளர்ச்சியடைந்தமையினால் தனித்துவமான இந்துமதச் சூழலின் தொடர்ச்சியை வட இலங்கையில் ஏற்படுத்த முடிந்திருக்காத ஒரு கருத்தமைவின் விளைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தினை நிரப்புவதற்காகவே பஞ்ச ஈஸ்வரங்கள் என்ற சிவபூமிக்கோட்பாட்டை பிற்காலத்தில் இலங்கையில் நிலைப்பெற வைத்தனர். இப்பின்னணியில் ஈழத்தமிழர் இந்துக்கள் என்றவோரடிப்படையை இராவணன் காலத்துத் தொன்மத்தினைச் சான்று காட்டி நிறுவ முயற்சிக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. வடஈழத்து இந்துத்தமிழர் தமது இராச்சிய மட்டத்தில் சிவ வழிபாட்டினையே பிரதானமான மரபாகக் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துவதாக அமைந்த அதே மரபுகளை நல்லூர் இராசதானி ஆட்சிமரபுகளுடன் இணைத்து கல்வெட்டுச் சான்றுகளிலும் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இதனாலேயே நல்லூரில் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசில் அரசர்களும், பிரபுக்களும், முதலியார்களும் அடிக்கடி சிதம்பர தரிசனத்திற்காக தமிழகம் நோக்கி யாத்திரை செய்த மரபு உருவானமையை கள்ளியங்காட்டு செப்பேடுகள் உட்பட்ட யாழ்ப்பாண வரலாற்று மரபுகளும் பதிவு செய்து வைத்துள்ளமையைக் காணமுடிகின்றது.

4. இறுதியாக நல்லூர் இராசதானியின் வரலாற்றிருப்பினைத் தொடர்ச்சியாக நிறுவுவதற்கான எந்த விதமான செப்பேட்டுச்சாசனங்களும் அவ்வாட்சி குறித்த கால எல்லைக்குட்பட்டதாக இது வரையில் எமக்குக் கிடைத்திருக்காத இவ் வேளையில் கள்ளியங்காட்டுச் செப்பேட்டுச் சாசனமொன்றில் **யாழ்ப்பாண அரசு பண்ணிய பரராசசேகரனின் சிதம்பரப் பயணம்** தொடர்பான செய்திகள் பொறிக்கப்பட்டிருக்கின்ற வரலாற்றுச் சூழலை காணமுடிகின்றது. இவ்வரலாற்றுச் சூழலிலேதான் தில்லைச்சிதம்பரம் கோவில் பரிபாலனத்திற்காக தேவதானங்களாக வட இலங்கையிலுள்ள கிராமங்கள் தானமளிக்கப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றிருந்தமையை காணமுடிகின்றது. ஆகவே இடைக்கால நல்லூரில் தோற்றம் பெற்ற தொன்மங்களுக்கு அடிப்படையாக அமைந்த தென்னிந்தியக் குடியேற்றங்கள் வடஇலங்கையின் பண்பாட்டு ஊடகங்களாக மாற்றமடைந்திருந்தமையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

## Bibliography


1. சிற்றம்பலம், சி .க. **யாழ்ப்பாண இராச்சியம்**. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம். 1992
2. சண்முகலிங்கம், க., **இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாறு**. குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014
3. சண்முகலிங்கம், க., மதுசூதனன், தெ. **கருத்தியலும் வரலாறும்**. விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், கொழும்பு, 2006
4. ஜெகந்நாதன், பொ., **யாழ்ப்பாணத்தரசர் வரலாறும் காலமும்**. யாழ் இலக்கி வட்டம், யாழ்ப்பாணம், 1987
5. சின்னத்தம்பி, ஆறுமுகம். **ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு**. தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி., 1994
6. பத்மநாதன், சி.. **ஈழத்து இலக்கியமும் வரலாறு**. குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014
7. பத்மநாதன், சி. இலங்கையில் வன்னியர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014
8. ஹெல்மன். இராசநாயகம்., ' இலங்கைத்தமிழரின் வரலாற்றுணர்வும் கடந்த காலம் பற்றிய படிமங்களும்" **கூடம்** காலாண்டிதழ், தொகுப்பாசிரியர் மதுசூதனன், தெ.ஈ 2008 ஜனவரி - மார்ச், கொழும்பு
9. பக்தவத்சலபாரதி, **இலக்கிய மானிடவியல்**. அடையாளம் வெளியீடு, அடையாளம் பிரஸ் இந்தியா, 2014
10. ஷெய்கு ஸைனுத்தீன் மக்தூம்,கேரளமும் போர்ச்சுக்கீசிய காலனி ஆதிக்கமும் (ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஷ ாகிர் அஸிம்) அடையாளம் வெளியீடு, இந்தியா 2009
11. Ragupathy, P.,**Tamil Social Formation in Sri Lanka**: A Historical Outline Madras, 1986
12. கிருஷ்ணராசா, செ., வடஇலங்கைப்பண்பாட்டுத் தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட விளக்கம், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 13.11.2014 கல்விக்கிளை ( நிர்வாகம் ), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
13. ஏகநாயகிவல்லி, சிவராசசிங்கம்., **ஈழவரலாற்றுப் பதிவுகள்**. அரோவெப் பப்ளிர்ஸெர்ஸ் ரொரன்ரோ, கனடா, 2003
14. இராசநாயகம், செ.,**யாழ்ப்பாணச் சரித்திரம்**. எஜியன் எடுகேசனல் சேர்விஸ் நியூடெல்கி, 2003.
15. வேலுப்பிள்ளை, ஆ., **அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப்பண்பாட்டுச் சூழலும்**. சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 28 நவம்பர், 1998

46. Indrapala, K., **The Evolution of An Ethnic Identity: The Tamils in Sri Lanka,** MV Publication, Sydney, 2005